[Dr. H. V. Hande] *[1969 பிப்ரவரி 24*

Ministry are taken into confidence at each and every stage of the discussion, what the exact liability of the State Government in this matter is, what the exact number of repatriates who have come so far is, and what the number of repatriates who are likely to come in 1969–70 is? Will the Minister tell us all these things or place the exact details on the Table of the House? In addition to all these things, will this Government move the Union Government to persuade the Ceylon Government to allow the repatriates to bring with them a little more money because the repatriates have been there in Ceylon for long?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I have already pointed out that most of the expenditure is borne by the Union Government. This expenditure is outside the Plant; it does not come under the Plan. It is a national problem. The Union Government have assured us that they will bear the entire expenditure as and when we send up proposals. Our officers are in contact with the Centre. There is a board for rehabilitation and its meeting takes place periodically. We have been assured that most o tfhe expenditure will be borne by the Union Government.

As regards the hon. Member's suggestion to persuade the Ceylon Government to allow the repatriates to bring in more money, this Government may represent to the Union Government to take necessary steps.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ், ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருப்பிடத்தில் இல்லையாதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கம் அவருக்குத் தனியாக அனுப்பிவைக்கப் படும்.

அடுத்து, 1964–65-ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகப்படியான செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளிப்பார்கள்.

5. 1964-65-ம் ஆண்டில் அதிகப்படி செலவினத்திற்கான மானியக் கோரிக்கைகள் அளித்தல்

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர்
மு.ப. 10–30 அவர்களே, 1964-65-ம் ஆண்டில் சில மானியங்களின் கீழ் ஏற்பட்ட செலவினம் அவ்வாண்டிற்கான ஒப்பளிப்பு வழங்கப்பட்ட இறுதி நிதி ஒதுக்கத்திற்கு மேற்பட்டதாகத் தெரியவந்ததால், அம்மிகைச் செலவினங்களை ஈடு செய்வதற்கான மானிய விவர அறிக்கையை மன்றத்தின் முன் வைக்க வேண்டி முன் வந்துள்ளேன்.

இந்த மிகைச் செலவினங்களை ஆய்வு செய்த 1967-68-ம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவினர் தமிழ்நாடு அரசுக்

1969 பிப்ரவரி 24]   [திரு. கே. ஏ. மதியழகன்]

கணக்குகள் பற்றிய தங்கள் அறிக்கையின் 16-வது பத்தியில் அவ்வறிக்கையின் 1-ம் இணைப்பில் கண்டுள்ளபடி, மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளைச் சட்ட மன்றத்தின் இசைவிற்காக அளிக்கும்படி பரிந்துரைத்தனர். பொதுக் கணக்குக் குழுவினரின் இப் பரிவுரைக் கிணங்க, 1964–65-ம் ஆண்டிற்கான மிகைச் செலவினங்களை ஈடுசெய்யும் வகையில் மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கை இப்போது அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு செலவினமும் அதிகரித்ததற்கான காரணங்கள் மானிய விவர அறிக்கையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இம் மிகைச் செலவினங்களின் மொத்தம் 23.05 லட்சம் ரூபாயாகிறது. இம் மிகைச் செலவினை முறைப்படுத்துவதற்குச் சட்ட மன்றத்தின் இசைவு வேண்டப்படுகிறது.

இவை கூறி, 1964–65-ம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய விவர அறிக்கையை இம் மன்றம் ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

6. 1968–69-ம் ஆண்டிற்கான செலவு குறித்த இரண்டாம் துணை நிதி அறிக்கை அளித்தல்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1968–69-ம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்க வேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். இத் துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் 25.18 கோடி ரூபாயாகும். இதில் ஏறக் குறைய 6.08 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கின் பாற்படும்; எஞ்சிய சுமார் 19.10 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்குகளின் பாற்படும். கடந்த ஆகஸ்ட் திங்களில் முதல் தொகுதித் துணை மதிப்பீடுகளை மன்றத்தின் முன் வைத்த பின்னர், அரசு ஒப்பளிப்பு வழங்கிய பெரும்பாலான "புதுப் பணித்" திட்டங்கள் இத்துணை மதிப்பீடுகளில் அடங்கும். சில மானியக் கோரிக்கைகளின்கீழ் தற்போதுள்ள நிதி ஒதுக்கத்திற்கு மேல் இப்போது அதிகமாய்ச் செலவாகக் கூடுமென எதிர் பார்க்கப்படுவதால், அந்த மானியங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்டிடவும் இந்த வாய்ப்பினைப் பயன் படுத்திக் கொண்டுள்ளோம்.

இத்துணை மதிப்பீடுகளில் மிகப் பெரியதொரு நிதி ஒதுக்கம் மாநில மின்சார வாரியத்திற்குக் கடன் உதவியளிப்பதற்காக வேண்டப்படுவதாகும். முந்திய சில ஆண்டுகளில், மாநில மின்சார வாரியம் தனது வணிகக் கணக்கில் ஈட்டிய வட்டித் தொகையை. போதிய ரொக்க இருப்பு இராததால் மாநில அரசுக்குச் செலுத்தாமற்போய்விட்டது. இவ்வகையில் சேர்ந்து வந்த வட்டி நிலுவை 1967–68 இறுதிவரை மொத்தம் 9.72 கோடி ரூபாய் அளவில் நின்றது. இவ்வட்டி நிலுவையை மாநில மின்சார வாரியம் கொடுத்துத் தீர்க்க இயலும் வகையில் மாநில அரசு அதற்கு இப்போது கடன் வழங்கக் கருதியுள்ளது. இதனால் மாநில மின்சார வாரியத்தின் நிதி நிலை அரசிற்குச் சேர வேண்டிய வட்டியைச் செலுத்துவதற்கு இயலாமல், வட்டி